## இந்தியா ஃபவுண்டேஷன் ஃபார் தி ஆர்ட்ஸ்

## ப்ராஜெக்ட் 560க்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

## கடைசி தேதி: செப்டம்பர் 21, 2026

பெங்களூரை ஒரு கவிஞனின் நாட்குறிப்பாக, ஒரு படைப்பாக்கமிக்க மென்பொருளாளனின் விதையாக, ஒரு கலைஞனின் ஸ்டூடியோவாக, ஒரு திரைப்பட இயக்குனரின் எடிட்டிங் மேசையாக, ஒரு நிகழ்த்துக் கலைஞனின் மேடையாக கற்பனை செய்து பாருங்கள்! பல்வேறுபட்ட சமூகங்களிலிருந்தும், மறைந்திருக்கும் வெளிகளிலிருந்தும், பல அடுக்கு வரலாறுகளிலிருந்தும், கூட்டு லட்சியங்களிலிருந்தும் வளர்ந்து வரும் நகரத்தின் குரல்களைக் கேளுங்கள். நாம் பகிர்ந்து கொள்ளப்போகும் எதிர்காலத்தின் ஊடாக எவ்வாறு பயணப்படப் போகிறோம் என்று நீங்கள் கேட்டுக் கொள்ள விரும்பினால், ப்ராஜெக்ட் 560 அதற்கான கூட்டுமுயற்சிகளுக்கானதொரு களம் என்றே கூறலாம்.

ப்ராஜெக்ட் 560 என்பது விளிம்புகளின் வரலாற்று அடுக்குகளுடன் குழப்பமான நிகழ்காலம் மற்றும் அதிவேகமாக விரிவடைந்து வரும் பெருநகரத்தின் வருங்காலக் கற்பனைகள் ஆகியவற்றுடன் நமக்கு பரிச்சயமான இடங்களைத் தாண்டி நகரைக் காணவிழையும் ஒரு கலைத் தூண்டுதலாகும்.

இந்த திட்டத்தின் நோக்கம் பெங்களூரின் பன்மொழி யதார்த்தங்கள், அதன் ஜாதி, மொழி, பாலின பரிமாணங்களின் கலவையான ஊடாட்டம், நமது நகர்புற சூழலை உருவாக்கும் முக்கியமான சூழலியல் கதையாடல்கள் ஆகியவற்றைக் குறித்த நுட்பமான உணர்திறன் கொண்ட கலை, காட்சிப்படுத்தல் மற்றும் அறிவார்ந்த ஆற்றல்களைப் பேணும் ஒரு சக பயணிகளின் வலைப்பின்னலை கட்டமைப்பது போன்றவையாகும்.

பெங்களூரின் வளர்ச்சியும் விரிவாக்கமும் நமது எளிமையான புரிதலுக்கு அப்பாற்பட்டது. இந்நகரத்தின் கலை ஆற்றலை வளமையான காட்சி அரங்குகளுக்குள்ளாகவோ அல்லது பாரம்பரிய கலாச்சார மையங்களுக்குள்ளாகவோ சுருக்கிவிடமுடியாது. பெங்களூரின் படைப்பாற்றலின் திறன் நகர்ந்து கொண்டேயிருக்கிறது. இது நகர்ப்புற கிராமங்கள், சுயம்புவான சமூகங்கள், சுயாதீன ஒப்பந்த வேலை செய்யும் தொழிலாளர் இயக்கங்கள், புலம்பெயர்ந்தோர் வசிப்பிடங்கள், உருவாக்கத் தளங்கள், வாசிப்புக் குழுக்கள், பொது இடங்ககளில் பென்சிலால் படம் வரைபவர்கள் மற்றும் முறைசாரா படைப்பாக்கப் புலங்கள் போன்ற முன்னெதிர் நோக்காத மூலைகளில் செழித்து வளர்கிறது. ப்ராஜெக்ட் 560-யின் இந்த சுழற்சியானது, பெங்களூர் நகரத்தில் உள்ள நிபுணர்கள் மற்றும் பயிற்சியாளர்களுடன் ஒரு ஆழமான, வழிநடத்தும் பயணத்திற்கான அழைப்பாகும். இது நகரத்தின் வரலாறுகள், வாழ்ந்த இடங்கள் மற்றும் கற்பனை செய்யப்பட்ட எதிர்காலங்களுடன் முழு ஈடுபாட்டுடன் தொடர்பு கொள்ள ஒரு இடத்தை கூட்டாக உருவாக்குகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட நடைப்பயணங்கள்; நாடகம், நடனம் மற்றும் இசை நிகழ்ச்சிகள்; நிர்மாணக்கலை; கண்காட்சிகள்; சமூகக் குழுக்களின் அடிப்படையிலான நிகழ்வுகள்; கேமராக்கள் மற்றும் ஒளியியல் கருவிகளைப் (lens-based) பயன்படுத்திச் செய்யப்படும் அனைத்து வகையான படைப்பு மற்றும் கலை வெளிப்பாடுகள்; விளையாட்டுகள்; பட்டறைகள்; மற்றும் வெளியீடுகளுக்கு வழிவகுக்கும் திட்ட யோசனைகளை நாங்கள் வரவேற்கிறோம்.

**அடைகாத்து (Incubation) வழிநடத்தும் பயணம்**

ப்ராஜேக்ட் 560-யின் முந்தைய பதிப்புகளைப் போலல்லாமல், ஆரம்பத்திலிருந்தே முழுமையாக உருவாக்கப்பட்ட திட்ட செயலாக்கங்களுடன், இந்த மறுதொடக்கம் அடைகாக்கும் அம்சத்திற்கு முக்கியத்துவம் அளிக்கிறது. பெங்களூரை ஒரு நகரமாகக் கருதி சிந்திக்கும் ஒத்த எண்ணம் கொண்ட படைப்பாற்றல் பயிற்சியாளர்களின் குழுவுடன் கூட்டு உரையாடல்கள் மூலம் படைப்பு யோசனைகளை வளர்க்க விரும்பும் பெங்களூரைச் சேர்ந்த கலைஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களை IFA தேடுகிறது. தகுதியான திட்டங்களுக்கான கோரிக்கைக்கு பதிலளிக்கும் விதமாக திட்ட முன்மொழிவுடன் விண்ணப்பிக்க ஆர்வமுள்ள நபர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் முதலில் தங்கள் திட்டங்களை செயல்படுத்த வழிவகுக்கும் கடுமையான, ஆழமான படைப்புகளை அடைகாக்கும் ஆராய்ச்சிக் கூடத்தினுள் நுழைவார்கள்.

அடைகாக்கும் ஆராய்ச்சிக் கூடம் (Incubation Lab) IFA-வால் நவம்பர் மாதத்தின் இரண்டு வாரங்களில் பத்து வார நாட்களில் அழைக்கப்பட்ட பயிற்ச்சியாளர்களுடன் வழிநடத்தப்படும். இந்த ஆராய்ச்சிக் கூடத்தில் ஒரு பகுதியாக பகிரப்பட்ட உரையாடல்கள், ஆய்வுகள், நடைப்பயணங்கள், பட்டறைகள் மற்றும் சக பரிமாற்றங்கள் இருக்கும், இது நமது அக்கம்பக்கத்தினரைப் பற்றிய புரிதல்கள், நகரினைப் பற்றி அறிந்து கொள்வதற்கான தூண்டுதல்கள், ஆண்டு முழுவதுமான காட்சிப்படுத்தல் பார்வைகள் (curatorial vision) அல்லது நகரத்தின் மீதான கலை ஆராய்ச்சி போன்றவற்றின் கற்பனைகளை வளப்படுத்தும்.

திட்டங்களின் விளைவுகள், வரைகலை வடிவக் கதைகள் (graphic narratives), அனிமேஷன்கள், புனைவு அல்லாத படைப்புகள், இசை ஆய்வுகள், நிகழ்த்து கலைகள், விரிவுரை நிகழ்ச்சிகள், கண்காட்சிகள், சூழல் சார்ந்த நிர்மாணக்கலை (site-specific installations), படைப்பாக்க மென்பொருள் துவக்க முகாம்கள் (creative coding bootcamps), தன்னிச்சையான மின்னனு இசை அமர்வு (synthjamming), கலை ஆராய்ச்சி தனி வரைவுகள் (artistic research monographs), கட்டுரைத் திரைப்படங்கள் அல்லது பல்துறை சார்ந்த படைப்புகள் (Interdisciplinary works) உட்பட பல்வேறு வகைகளில் இருக்கலாம். இந்த விளைவுகளின் விளக்கக்காட்சி (presentation) பொது மன்றத்தில் (in public) ஒரு பௌதிக வடிவில் (physical format) இருக்க வேண்டும், தேவைப்பட்டால் பகுதியாக மெய்நிகர் கூறுகளுடன் (with virtual elements) இருக்க வேண்டும் .

**திட்டத்தின் காலம்:** 8 மாதங்கள் வரை

**பட்ஜெட்:** அதிகபட்சமாக ரூ. 4,00,000/- வரை

**யார் விண்ணப்பிக்கலாம்?**

பல்வேறு துறைகளில் பணிபுரியும் பயிற்சியாளர்களிடமிருந்து முன்மொழிவுகளை நாங்கள் அழைக்கிறோம். இவற்றில் அடங்குபவர்கள்:

- இசை, ஒலி, உரை, நடனம், அசைவு, நாடகம், பொம்மலாட்டம், கதைசொல்லல், மந்திரம், சர்க்கஸ் மற்றும் பிற நிகழ்த்து கலைகளில் பணிபுரியும் நிகழ்த்து கலைஞர்கள்.
- திரைப்படம் (புனைகதை மற்றும் புனைகதை அல்லாத) அனிமேஷன், புகைப்படம் எடுத்தல், நிர்மாணக்கலை, புதிய ஊடகம், படைப்பாக்க மென்பொருள், செயற்கை நுண்ணறிவு, ரோபாட்டிக்ஸ், ஊடாடும் கலைகள், விளையாட்டு / கருத்து சார்ந்த கலை வடிவம், ஓவியம், சிற்பம், அச்சு தயாரித்தல், சித்திரக் கதை புத்தகங்கள் (comic books), சித்திரக் கதை, ஓவியர் புத்தகங்கள்(Artist books) மற்றும் பிற காட்சி கலைகள் உள்ளிட்ட அனைத்து வடிவங்களிலும் பணிபுரியும் காட்சி கலைஞர்கள் (visual artists).
- குறிப்பாக கண்காட்சி சூழலுக்கு வெளியே பணிபுரியும் க்யூரேட்டர்கள்
- இலக்கிய படைப்புலகில் பணிபுரியும் கவிஞர்கள், நாவலாசிரியர்கள், சிறுகதை எழுத்தாளர்கள், நாடக ஆசிரியர்கள், திரைப்பட திரைக்கதை எழுத்தாளர்கள், காமிக்ஸ் எழுத்தாளர்கள், விளையாட்டு எழுத்தாளர்கள், படைப்பு புனைவு அல்லாத எழுத்தாளர்கள்
- இடைநிலைப் பணிகளில் ஈடுபட்டுள்ள பயிற்சியாளர்கள்
- பெங்களூரில் வசிப்பவர்கள்

**சமர்ப்பிப்பு வழிகாட்டுதல்கள்**

பின்வருவனவற்றுடன் உங்கள் முன்மொழிவை எங்களுக்கு அனுப்புங்கள்:

- ஒரு பயிற்சியாளராக உங்கள் தற்போதைய கலை நடைமுறை, அக்கறைகள் மற்றும் ஆர்வங்கள்
- பெங்களூர் தொடர்பான உங்கள் கலை சார்ந்த அக்கறைகள் அல்லது ஆராய்ச்சி கேள்விகள், குறிப்பாக அதன் புறநகர்ப் பகுதிகள், அன்றாட பன்மொழி யதார்த்தங்கள், சுற்றுச்சூழல் கதைகள் ஆகியவற்றின் மீதான கவனம்
- பெங்களூரில் நீங்கள் இணைந்து பணியாற்ற விரும்பக்கூடியவர்கள், சமூகங்கள் அல்லது நகர்ப்புற இடங்கள் உட்பட திட்டத்தின் துவக்க வடிவம்

- **செயல்பாடுகளின் விரிவான காலவரிசை**
- தற்காலிக செலவின பட்டியல்
- படைப்புத் தொகுப்புகள்(portfolios), எழுத்துக்கள் (writings), புகைப்படங்கள் அல்லது முந்தைய படைப்புகளின் ஆடியோ/வீடியோ பதிவுகள் போன்ற துணைப் பொருட்கள் உட்பட, இந்த விண்ணப்பத்திற்கு பொருத்தமான முந்தைய படைப்புகளின் எடுத்துக்காட்டுகள்.

உங்கள் தற்போதைய அஞ்சல் முகவரி, தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் அடையாளத்துடன் உங்கள் CV.

உங்கள் இறுதி விண்ணப்பத்தை ஒரே மின்னஞ்சலில் ஜான் சேவியர்ஸ், john@indiaifa.org என்ற முகவரிக்கு, தலைப்பு வரியில்: Project Proposal for Project 560 என்று அனுப்பவும்

உங்கள் முன்மொழிவு தொடர்பான ஏதேனும் கேள்விகள் மற்றும் விளக்கங்களுக்கு, ஜான் சேவியர்ஸ், john@indiaifa.org என்ற முகவரிக்கு எழுதவும்

ஆங்கிலம் உட்பட எந்த இந்திய மொழியிலும் உங்கள் முன்மொழிவை எழுதலாம். IFA ஆங்கிலம் தவிர மற்ற இந்திய மொழிகளில் திட்டங்களை ஊக்குவிக்கிறது.

## தகுதி

- இந்திய குடிமக்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். இதில் PIO (இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள்) மற்றும் OCI (இந்தியாவின் வெளிநாட்டு குடிமகன்) அட்டை வைத்திருப்பவர்கள் சேர்க்கப்படவில்லை.
- விண்ணப்பதாரர்களிடம் பான் கார்டு மற்றும் அடையாளம் மற்றும் குடியுரிமைக்கான சான்றுக்காக பின்வருவனவற்றில் ஒன்று இருக்க வேண்டும் - இந்திய பாஸ்போர்ட் அல்லது ஆதார் கார்டு அல்லது இந்தியாவின் வாக்காளர் அட்டை.
- தனிநபர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். எந்த வகையான நிறுவனங்களும் விண்ணப்பிக்க முடியாது.
- திட்டங்களில் கூட்டுப்பணியாளர்கள் இருந்தால், அவர்களும் இந்திய குடிமக்களாக இருக்க வேண்டும்.
- திட்டத்தின் முழு காலத்திலும் நீங்கள் பெங்களூரில் இருக்க வேண்டும்.
- IFA-வுடன் நிதி குற்றச்சாட்டு வரலாற்றைக் கொண்ட நபர்கள் தகுதியற்றவர்கள்.
- முந்தைய IFA மானியத்திலிருந்து IFA-வில் ஒப்புக் கொள்ளப்பட்ட விளைவுகளை டெபாசிட் செய்யத் தவறிய நபர்கள் தகுதியற்றவர்கள்.
- முன்பு IFA-விடமிருந்து எந்தவொரு காரணத்திற்காகவும் எதிர்காலத்தில் விண்ணப்பிக்க அனுமதிக்கப்படாத கடிதத்தைப் பெற்ற நபர்கள் தகுதியற்றவர்கள்.
- தற்போது IFA-வால் செயல்படுத்தப்படும் ஒரு திட்டத்தில் பணிபுரியும் நபர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.

- கூட்டுக் கணக்கு இருந்தால் ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்கள் விண்ணப்பிக்கலாம். இல்லையென்றால், அவர்களில் ஒருவர் மட்டுமே மற்றவர்களை கூட்டுப்பணியாளர்களாகக் கொண்டு விண்ணப்பிக்க வேண்டும்.

**தேர்வு செயல்முறை**

குறுகிய பட்டியலிடப்பட்ட முன்மொழிவுகள் வெளிப்புற குழுவால் மதிப்பீடு செய்யப்படும் மற்றும் விண்ணப்பதாரர்கள் தங்கள் திட்ட யோசனைகளை குழுவிடம் முன்வைக்க வேண்டும். இன்குபேஷன் லேப் மற்றும் செயலாக்கத்திற்கான திட்டத் தேர்வுகள் அக்டோபர் 2026 இல் அறிவிக்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து திட்டங்களும் IFA-வால் செயல்படுத்தப்படும்.

**முக்கிய தேதிகள்**

**கேள்விகள் மற்றும் வரைவு யோசனைகளுக்கான காலக்கெடு:** செப்டம்பர் 11, 2026

**இறுதி முன்மொழிவுகளுக்கான காலக்கெடு:** செப்டம்பர் 21, 2026

**இன்குபேஷன் லேப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டங்களின் அறிவிப்பு:** அக்டோபர் 2026

**திட்ட தொடக்க தேதி**: நவம்பர் தொடக்கத்தில்

**இன்குபேஷன் லேப் கட்டம்:** நவம்பர் 16-27, 2026

இறுதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட கலைஞர்கள் இன்குபேஷன் லேப்பின் முழு காலத்திற்கும் நேரில் இருக்க வேண்டும்.

குழந்தைகள் உட்பட அனைவரையும் ஆதரிக்கும், மதிக்கும் மற்றும் பாதுகாக்கும் பாதுகாப்பான சூழலை உருவாக்க IFA உறுதிபூண்டுள்ளது என்பதை நினைவில் கொள்ளவும். விண்ணப்பதாரர் இதற்கு இணங்க வேண்டும் மற்றும் எல்லா நேரங்களிலும் அதை நிலைநிறுத்த வேண்டும்.

நம்ம 560. நம்ம ப்ராஜெக்ட். நம்ம ஊரு.